2019 பிப்ரவரி 12]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் V.P.B. பரமசிவம், (குறுக்கீடு) சம்பந்தப்பட்ட துறையின் அமைச்சர் என்பதை ஒத்துக்கொள்கிறேன். அப்படிக் கேட்டால் வழக்கமாக சரியாக வராது. நீங்கள் நீதிமன்றம் குறித்துக் கேட்டீர்கள். நீதிமன்றம் குறித்து கேள்வி இருந்தால் அமைச்சரிடம் பதில் இருக்கும். இருந்தாலும் சொல்வார். சரி, கேள்வியை முடியுங்கள்.*

டாக்டர் V.P.B. பரமசிவம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதனால் பொது மக்களுடைய அந்தக் கோரிக்கையையேற்று அந்த Granite quarry அமைப்பதற்குத் தடை விதிக்க ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறியிருக்கின்ற அந்த quarry விதிகளை மீறி செயல்பட்டால், மாவட்ட ஆட்சியரிடம் கலந்து பேசி, அப்படி ஏதாவது தவறு இருக்கும்பட்சத்தில், கண்டிப்பாக அதன்மீது அரசு உரிய நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினருக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 56, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன், மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

56—

கைத்தறி நெசவாளர் கூட்டுறவுக் கடன் சங்கம்

***7092—திரு. எஸ்.எஸ். சரவணன்:**

மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் கைத்தறி நெசவாளர்களுக்கென கைத்தறி நெசவாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

[*2019 பிப்ரவரி 12*

முற்பகல் 10—40

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன், கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

கைத்தறி நெசவாளர்களுக்கென கைத்தறி நெசவாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைப்பதற்கான முன்மொழிவு எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சரவணன் அவர்கள்.*

திரு. எஸ்.எஸ். சரவணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கைத்தறி நெசவாளர்களுக்கு சுமார் 200 யூனிட் இலவச மின்சாரம் வழங்கி, அவர்களுடைய வாழ்க்கைத் தரத்தை மேன்மையடையச் செய்தார்கள். மாண்புமிகு அம்மா அவர்களின் வழியில் நேற்றையதினம் பேரவை விதி 110—ன்கீழ் நம்முடைய மாண்புமிகு தமிழக முதல்வர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்கள் அனைவரும் வியக்கும் வகையில் தமிழகத்திலுள்ள அமைப்புசாரா தொழிலாளர்கள், சுமார் 60 இலட்சம் குடும்பத்தாருக்கு அரசின் சிறப்பு நிதியாக, குறிப்பாக, கைத்தறி, விசைத்தறி, பட்டு கைத்தறி நெசவாளர்களுக்கு சுமார் ரூ.2,000/— நிதி வழங்கப்படும் என்று அறிவிப்புச் செய்துள்ளார்கள். 'ஏழைகளின் சிரிப்பில் இறைவனைக் காணலாம்' என்பர். ஆனால், இனிவருங்காலங்களில் 'ஏழைகளின் சிரிப்பில் அம்மாவின் அரசைக் காண முடியும்' என்னும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) அனைத்துத் தொழிலாளர் குடும்பங்களும் மகிழ்ச்சியடைந்துள்ளார்கள். தமிழக மக்களின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அண்ணன் திரு. எடப்பாடியார் அவர்களுக்கும், மாண்புமிகு துணை முதல்வர் அண்ணன் திரு. ஓ.பி.எஸ். அவர்களுக்கும் கோடானுகோடி நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

தமிழகத்தில் பெரும்பகுதிகளில் நலிவடைந்துவரும் கைத்தறி நெசவு செய்யும் தொழிலாளர்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்கு அவர்களின் தொழிலுக்குத் தேவையான, நூல், பாவு, பட்டு, சாயப் பொருட்கள், அச்சு, காட்டன், jacquard box *மற்றும்*

2019 பிப்ரவரி 12]

தறி மேடை ஆகிய மூலப் பொருட்களை எளிதில் பெறுவதற்கு நம்முடைய மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, கைத்தறி நெசவாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்களை அமைப்பதன்மூலம் கைத்தறித் தொழிலை மேன்மைப்படுத்துவதோடு, அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் உயர்த்த முடியும் என்பதாலும், மாநிலப் பொருளாதார வளர்ச்சி அதிகரிக்கும் என்பதாலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இதுகுறித்து மறுபரிசீலனை செய்ய வேண்டுமென தாழ்மையுடன் கேட்டுக்கொண்டு, நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. ஓ.எஸ். மணியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விவசாயிகள், பொதுமக்கள், தொழிலாளர்கள் என பலதரப்பட்ட மக்களுக்கு ஏற்றமுறையில் கடனுதவி செய்து கொடுத்தும், அரசின் மானியங்களை வழங்கியும், விவசாயிகளுக்கு வட்டியில்லா கடனுதவி வழங்கியும், பொதுமக்களுக்குத் தேவையான இ–சேவைச் சான்றுகளை வழங்கியும், தேசியமயமாக்கப்பட்ட வங்கிகளுக்கு இணையாக தமிழ்நாட்டில் கூட்டுறவு விவசாயச் சங்கங்கள் மற்றும் தொடக்க வேளாண்மை வங்கிகள் செயல்பட்டு வருகின்றன. மேலும், நெசவாளர் கூட்டுறவுச் சங்க வங்கிகள் மூலமாகப் பெருமளவில் கடனுதவிகள் மற்றும் காசுக் கடன்களும் வழங்கப்பட்டு வருகின்றன. கைத்தறி மற்றும் துணிநூல் துறையைப் பொறுத்தமட்டில், 1983 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் மற்றும் 1988 ஆம் ஆண்டு தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் விதிகள் ஆகியவற்றிற்கு உட்பட்டு, முதன்மை அமைப்பாளரால்,* Chief Promoter–*இடமிருந்து முன்மொழிவுகள் பெறப்பட்டு, பதிவாளரால் பரிசீலனை செய்யப்பட்டு, தொடக்கக் கைத்தறி நெசவாளர் கூட்டுறவு உற்பத்தி மற்றும் விற்பனைச் சங்கங்கள் பதிவு செய்யப்படுகின்றன. தமிழகத்தில் 1,139 கைத்தறி மற்றும் 196 விசைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள் இயங்கி வருகின்றன. கைத்தறி நெசவாளர் கூட்டுறவுச் சங்க உறுப்பினர்களுக்குக் கடனுதவி வழங்கும்பொருட்டு, 2017–2018 ஆம் ஆண்டில், ரூ.443.07 கோடி காசுக் கடன் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2018–2019 ஆம் ஆண்டில் ரூ.450.55 கோடி காசுக் கடன் ஒப்பளிப்பு செய்யப்பட்டுள்ளது. 2017–2018 ஆம் ஆண்டில் வட்டி மானியம்*

ரூ.17.02 கோடியும், 2018–2019 ஆம் ஆண்டில் வட்டி மானியம் ரூ.21.25 கோடியும் வழங்கப்பட்டிருக்கிறது. எனவே, நெசவாளர் பெருமக்களுக்கென்று தனியாக நெசவாளர் கூட்டுறவுக் கடன் சங்கங்கள் அமைப்பதற்கான தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 57, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

57—

மருத்துவக் கல்லூரி

***36709—திரு. டி. செங்குட்டுவன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி–ஒசூர் தேசிய ஆறு வழிச் சாலையில் மருத்துவக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசினுடைய 'மருத்துவக் கல்லூரி இல்லாத மாவட்டங்களிலே மருத்துவக் கல்லூரிகள் அமைக்கப்படும்' என்ற கொள்கையின் அடிப்படையில், மருத்துவக் கல்லூரி அமைக்கப்படாத மாவட்டங்களில் கிருஷ்ணகிரி மாவட்டமும் இருக்கின்ற காரணத்தினால், வருங்காலத்தில் கிருஷ்ணகிரி மாவட்டம் அரசினுடைய கவனத்தில் எடுத்துக்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–45

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன் அவர்கள்.*